விலை சதம் 40

ஈழநாடு
THE EELANADU

மலர் 20 ஆனி 7 ஞாயிறு 14 இதழ் 187

யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-6-78

RECEIVED 1978-6-21 PERIODICALS DIVISION

'வேலைதேடிக்கொடுக்கும்'

போலி கம்பெனிகள் மீது

ஐ. ஐ. டி. பொலிஸார் வலைவீச்சு

(தொழிலாளர்)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப்பெற்றுத்தருவதாகக்கூறி, பணம் பறிக்கும் சில கம்பெனிகள்மீது, தொழில் இலாகா கடுமையான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதே நேரத்தில் தொழில் இலாகாவுடன் பதிவுசெய்து கொண்டதாகக்கூறி பணம் பறிக்கும் சில போலிக் கம்பெனி'களுமீது இப்பொழுது ஐ. ஐ. டி. பொலிஸார் பரவலாக வலைவிரித்துள்ளனர்!

அண்மையில் கொழும்பிலுள்ள கம்பெனி ஒன்று யாழ்ப்பாணத்திற்கு வந்து பிரபல ஹோட்டலொன்றில் தங்கி நேர்முகப்பரீட்சை நடாத்தியதோடு, பல வாலிபர்களிடமிருந்து எழுநூற்றைறம்பது ரூபாமுதல் ஆயிரத்தைஞ்நூறு ரூபா வரை பணத்தை அறவிட்ட

[6-ம் பக்கம் பார்க்க]

"தமிழர் விடுதலைக் கூட்டணியின்

கட்டுப்பாட்டை மீறுவோர்மீது

உடன் நடவடிக்கை வேண்டும்!

இளைஞர் பேரவை தீர்மானம்

இயக்குநர் பதவி நியமனத்துக்கு ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் கூட்டணி முடிவுகளை எடுக்கப்பட்டமுடிவுகள் பற்றியும், நித்தமும் தொடர்பாக வெளிவந்தவதந்திகளைச் செய்திகள்பற்றியும் இளைஞர்களாகிய எங்களுக்கு மனவேதனையும், கொதிப்பும் ஏற்பட்டுள்ளது.'

யாழ். விராஸ்லிவீதியிலுள்ள கூட்டுறவு ஊழியர் காரியாலயத்தில் நேற்றுக்காலை நடந்த தமிழ் இளைஞர் பேரவைக் கூட்டத்தில் மேற்கண்டதீர்மானம் நிறைவேறியது.

திரு. எஸ். இராசதுரை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

வடபிராந்திய இ. போ. ச. இயக்குநர்சபைக்கு திரு. மகேந்திரன் செல்வத்தம்பு நியமிக்கப்பட்டதையிட்டு பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கட்டணிக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது யாப்பின் பிரிவு 4(7)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கருதுகின்றோம்.

கட்டுப்பாட்டை மீறுவோர் விஷயத்தில் தொடர்ந்து கூட்டணி ஒழுங்கு நடவடிக்கைக் குழு நடவடிக்கை எடுக்காதிருப்பதை நாம் விரும்பவில்லை.

பொதுப்பணியாளர்களுக்கு; அனுபவ முதிர்ச்சியும், நிர்வாகத் திறமையும் மற்றும் தொழிற்சங்க ரீதியான அனுபவம், பொதுமக்களுடன் கலந்து பழகும் இயல்பு உள்ளவர்களையே தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஒடுக்கப்பட்டோர் அரசியல் தலைவர்களை நாங்கள் ஆக்கிக்கொள்ள தயாராகவில்லை. சேவையையும் தியாகங்களையும் கருத்திற்கொண்டு சாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டமுறையில் தகுதியுடைய எவரையும் தலைவராக ஏற்றுக் கொள்வோம்.

அமைப்புக்குக் கீழ்ப்படியாத எவரையும் தலைவராக ஏற்க தயாராக இல்லை.

வடபிரதேச இ. போ. ச. இயக்குநர்பதவியை கூட்டணிப்பொறுப்பாளரான சுதந்திர இளைஞர் பேரவைக்கிளைகளும் திரு. மகேந்திரன் செல்வத்தம்புவுக்குத் தந்திருப்பதை கோரிக்கை விடவேண்டும்' என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டுக்கொள்கையில் இம்மாதம் 24ம் 25ந் தேதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர்விடுதலைக் கூட்டணிப்பொதுச்சபை கூட்டத்திற்கு 10 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

மியூபாலிக் நடக்கும் இளைஞர் ஒன்றியத்திற்கு இருவர் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் மூவர் 24ந்தேதி மட்டக்களப்பில் கூட்டணித் தலைவர்களின் ஆலோசனையுடன் தெரிவுசெய்யப்படுவார்கள்.

[வ]

ஆஸி. தூதுவர் நாளையாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய தூதுவர் திரு. ஏ. எச். போத்விக் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார்.

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் யாழ். கிளையின் அழைப்பின் மீது இங்குவரும் ஆஸ்திரேலிய தூதுவர் நாளை மாலை 6 மணிக்கு யாழ். நிலமர் கண்டபத்தில் "பொதுநல அமைப்பின் இன்றைய நிலை" என்னும் பொருள்பற்றி சிறப்புரையாற்றுவார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஐக்கிய நாடுகள் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. போகேந்திரா துரைசுவாமி தலைமை வகிப்பார்.

இந்தத் முன்னர் ஆஸி தூதுவர் திரு. ஏ.எச். போத்விக்குக்கும் அவரது பாரியாருக்கும் 'பாம்கோஸ்'டில் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

சீன உதவிப் பிரதமர் இலங்கை விஜயம்

[தொழிலாளர்]

மக்கள் சீனக்குடியரசின் உதவி பிரதமர் திரு. லெங்பியாவோ இன்று இலங்கை வருகிறார்.

இன்று மாலை பதினொரு மணிக்கு கொழும்பு வந்தடையும் சீன உதவிப் பிரதமரை திரு. ஆர். பிரேமதாசா வரவேற்பார்.

இன்றுமாலை சீன உதவிப் பிரதமருக்கும் இலங்கைப் பிரதமருக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இங்குவரும் சீன உதவிப் பிரதமர், பொலன்னறுவை, தலைநகரான கண்டாரநாயக்கா ஞாபகார்த்த பள, பேராதனை ஆகிய இடங்களுக்கும் விஜயமாகச் செல்வார்.

பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக்கழகம் சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் இணைந்து நடாத்தும் விஞ்ஞான தேர்ச்சிக்கண்காணி பொருட்காட்சி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறும்.

நாளைக் காலை 10 மணிக்கு வடமாநில கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பொருட்காட்சியைத் திறந்து வைப்பார்.

பரிசளிப்பு விழா இம்மாதம் 4ம் தேதி மாலை நடைபெறும் யாழ். வளாக தலைவர் பேராசிரியர் சு. சிற்றம்பலத்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சிற்றம்பலத்தம் பரிசில்களை வழங்குவார். (வ)

நாடு தழுவிய முறையில்

ஒரு வாரகால உண்ணாவிரத போராட்டம்

விவசாயிகள் சங்கம் தீர்மானம்

சென்னை, ஜூன் 20

விவசாயிகள் சங்கர் கிளர்ச்சிக் கமிட்டி

விவசாயிகள் போராட்டம் தொடர்பாக இன்றுச் சென்னையிலும், சேலம் மாவட்டத்திலும் சுமார் ஆயிரம் விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் இன்று 182 விவசாயிகளும், சேலம் மாவட்டத்தில் 532 பேரும் கைது செய்யப்பட்டனர். சோளபுத்தூரில் இன்று மதியம் போராட்டத்தில் ஈடுபட்ட 390 விவசாயிகள் கைதுசெய்து அப்புறப்படுத்தப்பட்டனர். இன்று 2000 விவசாயிகள் இன்று ஊர்வலமாகச் சென்று தங்களின் போராட்டக் கோரிக்கையை வற்புறுத்தினர்.

இதற்கிடையே சென்னையில் இன்று கூடிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கர் கிளர்ச்சிக் கமிட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் இம்மாதம் வரை ஒருவார காலத்துக்கு தமிழ்

[6-ம் பக்கம் பார்க்க]

இந்திய ஜனத்தொகை 62 கோடி!

புதுடில்லி, ஜூன் 20

கடந்த வருடத்தில் இந்திய ஜனத்தொகை, 62 கோடி 58 லட்சமாக அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் பொதுத்தகவை, பம்பாய் (76 லட்சம்) முதலிடத்தையும் டில்லி (53 லட்சம்) இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன.

திரைப்படமூலம் குடும்பதிட்ட பிரசாரம்

(வெள்ளவத்தை)

அரசின்கீழ் இயங்கும் குடும்பத்திட்ட பிரசாரபிரிவு, திரைப்படங்களில் முன்னெடுக்கும் பத்திட்டத்தை மக்களிடையே அதிமுக்கியத்தை நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக தகவல் ஒலிபரப்பு அமைச்சின் கீழ் இயங்கும் குடும்பத்திட்ட பிரசார பிரிவு சன்தொகை மற்றும் குடும்பதிட்ட செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பும் இயக்கத்தின் கீழ் கிராமிய பிரசார பிரிவுகளாக அரச திரைப்படப்பிரிவு மூன்று இரு நிமிட திரைப்படத்தையும் படக்கண்டதயாரித்துள்ளது.

வர்விளம்பரம்

தேவை

சைக்கிளில் பால் விநியோகம் செய்ய ஒருவர் தேவை. தேரில் வரவும். திருமகள் பால் விநியோக நிலையம் 53, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 9629

INTENSIVE COURSE IN
FRENCH
Starting July 1
Audio-Visual Method
at the
ALLIANCE FRANCAISE DE JAFFNA.
130, Ist Cross St., Jaffna. Tele: 7782 9578

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சோலைவரி 2-ம் கந்தாயம் 1978

1978-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 30-6-1978-ந் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப் படவேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக 10% வெறிபாத்துப் பணம் அறவிடப்படும்

வாசகர்கள் வாகன வட்டங்கள், ஆஞ்சநேயர் முதலியன யாழ்ப்பாண வாசகர் ஆண்டுவிழாவில் தமது சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படவேண்டும், அத்துடன் வரிபிறப்பாளர்கள் ஆதனத்திற் கதிபோதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
19-6-78. 9630

ஜி.சி.ஈ. உயர்தர முடிவுகள் இனிமேல் செப்டம்பரில் வரும்

(யாழ்ப்பாணம்)

வருடம்தோறும் ஏப்ரலில் நடைபெறும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் செப்டம்பர் மாதத்திலேயே வெளியாகி விடுமென்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஸ்டான்லி கல்பகே தெரிவித்துள்ளார்.

செப்டம்பரில் பரீட்சை முடிவுகள் வெளியாகுமுன் கடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு டிசம்பர் மாதத்திலேயே பல்கலைக்கழக அனுமதிபற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டு விடும் என்றும் அவர் கூறினார்.

தற்போதுள்ளது போல் ஒழுங்கற்ற முறையில் முடிவு கள் தாமதிப்பது இனிமேல் இடம்பெற மாட்டாது என்றும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த பிரதி வருடமும் அக்டோபரில் தரம் நிறைப்படும் என உயர்கல்வி அமைச்சு முன்னர் கூறியிருந்தது தெரிந்ததே. (ச-இ)

"அதிகாரமும் பணமும்

இல்லாதவர்களை மக்கள் மறந்து விடுகின்றனர்"

(தொழும்பு)

"அதிகாரமும் பணமும் இல்லாதவர்களை எமது மக்கள் மறந்துவிடுகிறார்கள். மனிதன் இறந்த பிறகுதான் அவனது தகைமைகளை எடைபோடுகிறார்கள். அமரர் ஹண்டி பேரின்பநாயகத்தின் கலை ஆற்றல், யாழ்ப்பாண வாலிபர் சங்கிரசில் இவர் கொண்டிருந்த ஈடுபாடு, சுயமரியாதைக் கல்வியில் இவர் கொண்ட நாட்டம் ஆகியவற்றை இந்த நாடு அறியவேண்டும். இந்தியத் தலைவர்கள் பலரை இவர் வரவழைத்துக் காங்கிரஸ் காலத்தில் மிகப் பெரிய அரசியல் பிரமுகராக விளங்கினார்."

தொழும்பு சங்க இலக்கிய தண்பா எழுத், தொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடாத்திய அமரர் ஹண்டி பேரின்பநாயகம் இரங்கலணை கூட்டத்தில் இந்வாரம் திரு. எம். வை. நாயகம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாலை திரு. தி. நித்தியானந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. ஏ. தருமநாயகம் பேசுகையில், "1924-ல் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான் தென்னிலங்கையில்கூட இளைஞர்கள் மத்தியில் சமூகவுணர்வு தோன்றி ஜனநாயகக் கருத்துக்கள் வளர ஆரம்பித்தன" என்றார்.

கவிஞர் இ. அந்பிரைபரன் பேசுகையில் கூறியதாவது:- "இரங்கலணை வைக்க செந்தி நாதன் இலக்கை இலக்கிய காரர்களின் பிரதிநிதியாகவும் அவர்களை உற்சாகப்படுத்தும் தொத்தாகவும் விளங்கினார். ஈழத்துப் பேனா மன்னர்கள் வரிசையில் பலரை அறிமுகப்படுத்தினார். ஈழத்து இலக்கிய வளர்ச்சி, ஈழத்து மணி விளக்கு என்று நூல்களை எழுதிப் பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

திரு. நெல்லை க. பேரன் பேசுகையில் கூறியதாவது:- "ஹண்டி பேரின்பநாயகம் சாதி ஒழிப்புக்காக மிகவும் பாடுபட்டார். கல்லிலாங்கண்ணி ஒன்று கட்டிப் பல மாநாடுகள் நடத்தினார். இரகசிய சுவர்கள் யாழ்ப்பாணத்தில் நடக்கும் எந்தவொரு மதிய இலக்கியக் கூட்டத்திற்கும் தவறாது வருகை தருவார். கூட்ட ஆயத்தங்களுக்கு முன்பு தாம் வருகை தருவார். தென்னிந்திய சங்கீதங்களின் இறக்குமதிக்கு எதிராக டொமினிக்ஜீவா போன்றவர்களுடன் இணைந்து போராடியவர். இன்று அவர் இருந்தால் இந்த வந்து குவியும் சஞ்சிகைகளையும் ஆபாசப் புத்தகங்களையும் தன்னி வருத்தியிருப்பார். மண்வாசனை கதைகளை அழகாக எங்கு எழுதுகிறார் எழுதி எம்மை வசப்படுத்தினார். (எ)

சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

அரசினர் வடக்கிலுள்ள பொது மயானத்திற்கு செல்லும் வீதி கடந்த வாரம் சிரமதானம் மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அரசினர் சிரமதான சபை பருத்தியிலுள்ள பொது நல இயக்கங்கள், வர்த்தகர் மக்களும் மற்றும் வட்டுக்கோட்டை தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய அலுவலக ஊழியர்களும் இச்சிரமதானப்பணியில் கலந்து கொண்டனர். தொழில் அதிபர் திரு கனகராசா இச்சிரமதானப் பணிக்கு தேவையான மண் கொட்டி, வடக்கேக் ஆவின உயரணைக்கு கொடுத்து உதவினார். (ச)

புதிய யாழ்.-பதுளை ரயில் சேவை

(தொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும், பதுளைக்கும் இடையே புதிய 'எக்ஸ்பிரஸ்' ரயில் சேவை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த ரயில் 1ம், 2ம், 3ம் வகுப்புகளும், சிற்றுண்டிச் சாலையும் இணைக்கப்பட்டிருக்கும்.

ரயில் கட்டணங்கள் வழமையிலிருப்பதைப் பார்க்க சற்று கூடுதலாக குறிப்பிடப்படும் என அறியப்படுகிறது.

இந்த எக்ஸ்பிரஸ் ரயில் இரண்டு கிழமை முன்று ஸ்டேசன்களில் மட்டுமே நிறுத்தப்படும். (ச)

உற்பத்தி பொருட்கள் விற்பனை:

ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஏகபோக உரிமை வேண்டும்

பேரணைக்கு கா. பொ. பிரேரணை

[யாழ்ப்பாணம்]

"எல்லா அரசாங்க நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும் தத்தமது உற்பத்திப் பொருட்களை விற்கும் முன்னீட்டு முடிவுகளாக ஒவ்வொரு பகுதியிலுள்ள சங்கங்களை நியமனம் செய்யவேண்டும்" என பேரவையில் வலியுறுத்தி வாதாடினார் பிரேரணை ஒன்றை காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சமர்ப்பித்துள்ளார்.

திரு. கா. பொ. இரத்தினம் தமது பிரேரணையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: "இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம், இலங்கை உரகூட்டுத்தாபனம், தேசிய கடதாசி கூட்டுத்தாபனம், இலங்கை புகையிலை கூட்டுத்தாபனம், இலங்கை எண்ணெய் பொழும்பு கூட்டுத்தாபனம், அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், கட்டட பொருள் கூட்டுத்தாபனம், தேசிய பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் சகல உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் முகவர்களாக ஏகபோக உரிமை பெற்ற ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படவேண்டும். இதை எவ்வகையிலும் நிராகரிக்கக்கூடாது.

இதைவிட எல்லா அரசாங்க நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், உள்ளூராட்சி மன்றங்கள் தமது ஒப்பந்த வேலைகளைப் பல நோ. கூ. சங்கங்கள் கேட்டால் அவை வேலைப்பத்திரம் அனுப்பாவிட்டாலும், அதிகப்பட்டு தொகைக்கோ குறைந்த கேளிப் பணத்துடன் அதன் பத்து விதம் கூடிய தொகைக்கோ அந்த ஒப்பந்த வேலைகள் அவற்றுக்கு கேட்டுக்கு பேரவை வலியுறுத்த வேண்டும் என நான் கோருகிறேன். இதனால் பல நோ. கூ. சங்கங்கள் நட்டமின்றி இலங்கை மக்களுக்கு நிறையவான சேவை செய்வதாய்ப்பயனிக்க முடியும்." (ச-உ)

பெண்கள் மோதல்

ஒருவர் படுகாயம்

கரவெட்டியில் சம்பவம்

[நெல்லியடி]

நீண்ட நாள் குடும்பப் பகை காரணமாக பெண்களுக்கிடையே நடைபெற்ற மோதலில் காயத்திலேயே பத்தினி எம்பவர் தலையில் பலத்த காயத்துடன் மத்திய அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம்கரவெட்டி மேற்கு வடிவேல் என்னும் பகுதியில் நடைபெற்றுள்ளது. இரு குடும்பங்கள் தொடர்பாக பழுதிருக்கும் பொறாம

ஈழநாடு
The Eelanaadu

மாவும் பாணும்

கோதுமை மாவின் விலையும் பாணின் விலையும் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒரு ரூத்தல் மாவின் புதிய விலை எண்பத்தைந்து சதமாகவும் ஒரு ரூத்தல் பாணின் விலை எண்பது சதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

சமீப காலத்தில் மாவின் விலையும் பாணின் விலையும் அடிக்கடி மாற்றம் பெற்று மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றது.

உலகச் சந்தையில் மாவின் விலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே இங்கு மாவின் விலையும் பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக உணவு கட்டுப்படுத்துகை அமைச்சு தெரிவித்திருக்கிறது.

ஒரு ரூத்தல் மாவை ஒரு ரூபாய் என்பது சதம் கொடுத்து அரசாங்கம் வாங்கி இருத்தல் எண்பத்தைந்து சதமாக பொதுமக்களுக்கு வழங்கி செய்கிறது. இதனால் ஒரு இருத்தல் மாவுக்கு தொள்ளாயிரத்து சதம் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

இறக்குமதியை நம்பி இருக்கும் நாடுகள் உலகச் சந்தையில் பொருட்களின் விலைகள் உயரும்போது பாதிப்புக்குள்ளாகத்தான் வேண்டியிருக்கிறது.

மா, சீனி, அரிசி ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு நமது நாடு இன்னமும் வெளிநாடுகளையே நம்பியிருக்கிறது.

மா, சீனி ஆகியவைகளின் விலை முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அதிகரிக்கப்பட்டது. சீனி இருத்தல் ஏழு ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது மட்டுமன்றி சீனிக்கும் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இருத்தல் பத்து, இருபது ரூபாய் என்றும் விற்கப்பட்டது. இந்த விலையுயர்வு தான் முன்னைய ஆட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்ததற்கு முக்கிய காரணம் என்று சொல்லவேண்டும்.

அச்சமயத்தில் இந்தப் பொருட்களின் விலை உயர்வுக்கு உலகச் சந்தையில் பொருட்களின் விலை அதிகரித்ததே காரணமென்றும் உலகச்சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்கிக் குறைந்த விலைக்கு மக்களுக்கு வழங்குவதாகவும் அரசு தெரிவித்தது.

ஆனாலும் விலைவாசி உயர்வுக்காக முன்னைய எதிர்க்கட்சியினரான இன்றைய ஆட்சியாளர் கண்டனம் தெரிவித்தனர்.

முன்னைய அரசாங்கம் உலகச் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்ததும் இறக்குமதியைக் குறைத்து அந்தப் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டிலே உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது.

சீனிக்குப்பதில் கருப்பட்டி பனங்கட்டி உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட்டது. மாவுக்குப் பதிலாக மரவள்ளி மற்றும் சூரக்கள், சாமை போன்றவைகளை உற்பத்தி செய்வதற்கும் ஊக்கமளித்தது. இதனால் உள்ளூர் விவசாயிகளுக்கு வருமானம் கிடைத்ததுடன் அந்நியச் செலாவணியும் மீதப்படுகிறது!

பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்த காரணத்தினால் மக்களுக்கு அன்று அரசாங்கத்தின்மீது வெறுப்பேற்பட்டிருந்தது உண்மை.

இன்று சகலபொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. எந்தப்பொருளுக்கும் இன்று நாட்டில் தட்டுப்பாடு இல்லையென்பது உண்மையே. ஆனால் சாதாரண மக்கள் இவற்றை வாங்கக் கூடியதாகவே இல்லை. இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உச்சத்தில்.

இப்போது மாவினதும் பாணினதும் விலைகளும் அதிகரித்துவிட்டன. இதனால் பாதிக்கப்படுவோர் சாதாரண பொதுமக்கள் தான்.

நெல்விளைச்சல் அதிகரிக்கவும் இறக்குமதிசெய்யும் அரிசிமைட்டுமன்றி உள்ளூர் அரிசியைக் கூட வெளிநாடுகளுக்கு விற்பதுபற்றியும் அரசாங்கம் யோசித்து வருவதாகவும் அமைச்சர்கள் சிலர் கருதுகின்றனர்.

மாவும், பாணும் விலை உயர்வதால் உள்ளூர் அரிசியின் விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பது சாதாரண மக்களுக்குப் பெருங் உதவியாக இருக்கும்.

அரசாங்கம் இன்றைய இறக்குமதிக் கொள்கையையும் உள்ளூர் உற்பத்தி சம்பந்தமான நிட்டங்களையும் மறுபரிசீலனை செய்வது அவசியம்!

'தமிழர் வாழ்வோடு இணைந்தது கலை''

(கரியாலை)

"தமிழ் மக்களின் வாழ்வோடு கலை இரண்டறக்கலந்து இருக்கிறது. கலையோடு தமிழின் வாழ்க்கையையும் பிரித்துப் பிணைந்து விளங்குகிறது. தமிழரிடை வாழ்விலிருந்து கலையைப் பிரிக்கமுடியாது. போர்ப்பிசையும், டப்பா சங்கீதங்களும் தலைவிரித்தாடி தமிழ்மக்களின் பாரம்பரிய கர்நாடக இசையையே அழிக்க முற்படுகின்ற இந்தக்கால கட்டத்தில் பாரம்பரியமான தமிழ்மக்களின் கலையாக விளங்கும் நாட்டுக்கூத்துக் கலையையும், கதை வழிக்கூத்துக்கலையையும் காத்து இதனை கழியாமல் காப்பாற்றும் முயற்சிகளின் அவசியம் உணரப்படுவதாகவே நேற்றைய சமூக நிலையையும், அதன் அவசியத்தையும் நான் பார்க்கிறேன்"

இவ்வாறு அரியாலையூர் ஆனைவிழுந்தான் வி. சின்னையா வேலணை நெற்றாஜி சன சமூக நிலைய நாடக விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "நாட்டுக்கூத்து, தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தாகும். நம்முன்னோர்கள் இதனை அழியவிடாதுகாத்து எமக்குத்தந்துள்ளனர். இதற்கு நிறைந்தகலையம்சங்களுடன் ஒரு காலத்தில் நாட்டுக்கூத்து கதைவழிக்கூத்து எல்லாம் ஏனைஞ்செய்தவர்கள் இன்று அவற்றில் கலையம்சங்களைக் கண்டு அவைகளை வளர்க்க வேண்டுமென்று உழைத்துவருகின்றனர். இலங்கை வானொலியும் இதற்கென ஒரு உதவி வானொலி நிலையத்து அவர் மூலம் நாடகங்களில் இதுவரை காலமும் அழியாமல் பாதுகாக்கப்பட்டுவரும் கதைவழிக் கூத்து, நாட்டுக்கூத்து என்பவைகளை இலங்கை வானொலியில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளமைக்கும் பாராட்டுத் தெரிவிக்கவேண்டும்.

திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற மேற்படி நாடக விழாவில் திரு. வி. காங்கேசு நன்றி கூறினார். நாடகவிழாவில் 'அசட்டு மாப்பிள்ளை' என்ற சமூக நாடகமும், "மாலிகபூர்" என்ற சரித்திர நாடகமும் இடம்பெற்றன. (உ)

சுழிபுரம் ஆயுர்வேத வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் இராமசாமி ஆயுர்வேத வைத்தியசாலை தொடர்பாக 23-5-78 திகதி 'ஈழநாடு' நாளிதழில் 2ம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக சுழிபுரம் இராமசாமி விசேட ஆணையாளர் எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மேற்படி ஆயுர்வேதவைத்தியசாலைக்குப் பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர் தமது அறிக்கையில் நோயாளர்களை மருந்து இல்லாமல் திருப்பி அனுப்பவில்லை என்கூறியுள்ளார். அத்துடன் அந்தநேரத்து குயா 2311-00 பெறுமதியான மருந்துகள் இருக்கின்றன".

ஆறு மாதங்களாக பழுதான அம்புலன்ஸ்

மேலிடம் அசிரத்தை?

(பண்டத்தரிப்பு)

அம்புலன்ஸ் வாகனம் ஒன்று கடந்த ஆறுமாத காலத்திற்கு மேலாக பழுதடைந்த நிலையில் யாழ்ப்பாணக்கோட்டாரசேவை அத்தியட்சர் காரியாலயத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள அரசினர் வைத்தியசாலை ஒன்றில் சேவையில் உபயோகப்படுத்தப்பட்ட இந்தஅம்புலன்ஸ்வண்டி ஒரு விபத்தில் சிக்கி பழுதடைந்து 6 மாதங்களாகியும் இதை திருத்தி சேவையில் ஈடுபடுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையுடன் மேற்கொள்ளப்படவில்லையென்று புகார் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளையில் குடுகாயநல சிகிச்சைப்பிரிவை சேர்ந்த வாகனம் ஒன்றுக்கடந்த இரு மாதங்களாக பழுதடைந்த நிலையில் இக்கோரியாவை முன்பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெயிலிலும், மழையிலும் கிடந்து இந்த வாகனங்கள் விரைவில் மேலும் பழுதடைந்தபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது பற்றி மேலிடத்திற்குத் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. (உ)

கூட்டணி பொதுக்குழு மட்டுநகரில் கூடும்

பண்டிதர் கா.பொ. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய பொதுக் குழுக் கூட்டம் மட்டக்களப்பு நகரத்திலுள்ள பண்டிதுப்பு எம். பி. திரு. வினாசலிங்கத்தில் இல்லத்தில் இம்மாதம் 24 ம், 25 ம் தேதிகளில் நடைபெறும்.

இத்தகவலை கூட்டணி தலைமைச் செயலக பொறுப்புச் செயலாளரும், ஊர்காவற்றுறை எம். பியுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

திருத்தப்பட்ட அமைப்பு விதிகளுக்கு அமைய புதிய பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

கூட்டணியின் புதிய அதிபலர்களைத் தெரிவு செய்வதற்கான நாள் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுமென்றும், அரசியலமைப்பு திருத்தங்கள் பற்றியும் ஆராயப்படுமென்றும், அமைப்பு விதிகள் முழுவதும் திறவேற்றப்படுமென்றும் அவர் கூறினார்.

தொகுதிக் கிளைகளின் உறுப்புரிமை, பிரதிநிதித்துவம் இக்கூட்டத்தில் சரிபார்க்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

24 ம் தேதி காலை கூட்டங்களுமிலும், 25 ம் தேதி காலை ஆராயப்பற்றியும் கூட்டணி பகிரங்க கூட்டங்கள் நடாத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

"கவிதைகளில்

மலர் மங்கையரைப்பாடிய காலம் மாறிவிட்டது''

(மட்டுவில்)

"தமிழுக்காக இலக்கியம் படையுங்கள் என்ற கோஷம் மக்கள் மத்தியில் நன்றாக்கியிருந்த காலத்திலதான், மக்கள் இலக்கியம் படைத்தார் கவிஞர் முருகு. சந்தரராஜா. அவர் ஒரு சிறந்த இலக்கியத்தை சமைத்து நிறைதல் காரணமாகவே, அவர் கவிதைகளை மக்கள் மத்தியிலே அன்றாடம் தோன்றும் பிரச்னைகளைப்பற்றிப் பாட்டாக வெளிவரலாயிற்று."

'ஆண்வழிப்பு' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசிய எழுத்தாளர் கே. டானியல் மேற்கண்டவாறு கூறினார்.

கவிஞர் திரு. முருகு சந்தரராஜாவின் ஓராண்டு அஞ்சலி நினைத்தலும் அவர் 'ஆண் வழிப்பு' கவிதை நூல் வெளியிடப்பட்டது.

கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு கே. சுப்பையா தலைமையில், மட்டுவில் மாணவன் ஆ. மி. ஆ. க. பாடசாலை மண்டபத்தில் இக்கவிதை வெளியீட்டு விழா நடைபெற்றது.

திரு. எஸ். கே. இரகுநாதன் இந்த நூலை வெளியிட்டுவைத்தார். தீண்டாமை வேகுமான இலக்கத் தலைவர் திரு. எஸ். வி. என். நாகரத்தினம் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

உப தபாலதிபர் திரு. பி. வேலாயுதம், ஆசிரியர் திரு. க. வரமுத்து உட்பட பலர் கவிதை நூல்பற்றிக் கருத்துரைகள் வழங்கினர். திரு. டானியல் தொடர்ந்து பேசியதாவது:-

"பொதுவாக வானத்தைப், பூமியை, மலையை, மங்கையைப் பற்றிப் பாடுவதைத்தான் தமிழ் இலக்கியமாக்கொண்டு நான் இடத்ில் ஆராய்ச்சி செய்து பாடுவது தமிழ் இலக்கிய வரத்தாக்களின் மரபு.

ஆனால் இன்று சமூகத்தைப் படித்து, சமூகத்தில் ஏழைப் பாட்டாளிவர்க்கத்துடன் பழகி, அந்தச் சமூகத்தை ஊடுருவிப் பார்த்து, தினக் குலைகளின் இன்னல்களை உணர்ந்து, அந்த நிலையில் பிறக்கும் இலக்கியம்தான் மக்கள் இலக்கியம். இதுவே சமூகத்திற்கு ஏற்றது.

தொல்லை பூமியை தலைமையில் கவிஞர்களும் இறுதியில் சொத்தில் மறைந்த தலைவர் மாசே துங்கின் இறுதி நிமிடங்கள் சம்பந்தமான கவிதைகள் படமும் காண்பிக்கப்பட்டது. (உ)

பொலிசார் கண்காணிப்பு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சிப்பகுதியிலிருந்து சட்டவிரோதமாக காட்டுமரக் கிளைகள் கடத்திக்கொண்டு செல்பவர்களை கிளிநொச்சி பொலிசார் கண்காணித்து வருகின்றனர்.

பெருந்தொகையான காட்டு மரக்கிளைகள் கடத்திச்சென்ற லொறியை, கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வராகொட தலைமையிலான பொலிசார் கைப்பற்றினர்.

லொறிச்சாரதி, கிளினர் ஆகியோரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)

தொழிலாளர் பிரதிநிதி

(மட்டுக்கோட்டை)

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க நெற்றியாளர் குழுவிற்கு தொழிலாளர் பிரதிநிதியாக திரு. வே. இராசநாயகம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். (உ)

ஓவியக்கண்காட்சி

எதிர்க்கட்சித்தலைவர் இன்று திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

பேச்சுப்புலவிழந்த திரு. க. சந்திரதாசின் ஓவியக் கண்காட்சியொன்று யாழ். பொது நூலக நினைவு மண்டபத்தில் நடைபெறுகின்றது. கண்காட்சியை இன்றைய தினம் காலை காங்கேசன்துறை எம். பியும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் திறந்துவைப்பார்.

ஓவியத்தில் பத்திக் டிசைன்கள், கண்ணாடி டிசைன்கள், உயிரோட்டமுள்ள பத்தி டிசைன்கள், அழகிய மெற்றிரிக்கள், துணி டிசைன்கள் என ஆயிரக்கணக்கில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஓவியக் கலை மக்கள் தினமும் கண்டு களித்துச் செல்கின்றனர்.

ஓவியக் கண்காட்சியை 22-ந் திகதி அரசாங்க அதிபர் திரு. லயனல் வேணுக்டோவும், 23-ந் திகதிக்கு நகரபிதா ஜூலியட் செல்லர் பாடசாலை முதல்வர் திரு. நேசையாவும், 24-ந் திகதி தெல்லிப்பழை ஆசிரியர் கலாசாலை முதல்வர் திரு. எஸ். எஸ். கதிரையாவும், 26-ந் திகதியான இறுதி நாள் கண்காட்சியை சாவகச்சேரி எம். பி. திரு. வி. எஸ். நடராஜாவும் திறந்துவைப்பார்கள். (உ)

மனவாக்கு

அன்பே தெய்வம்.
அன்பே அறத்துக்குமாரக்கம்.
அன்பே நிரானத்துக்குத்
திறவுகோல்; அன்பே
ஞானத்திற்கிரமுமாகும்.
—கௌத புத்தர்

கருணாநிதி மீதான எஸ். எஸ். ஆர். கொலை முயற்சி வழக்கு

சென்னையில் ஆரம்பமானது

சென்னை, ஜூன் 20

நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனைக் கொலைசெய்ய முயன்றதாக தமிழக முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி முன்னாள் அமைச்சர் திரு. சண்முகம் மற்றும் நால்வர் மீது பதிவுசெய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணை நேற்று சென்னையில் நீதிபதி திரு. எம். டி. இராமலிங்கம் முன்னிலையில் ஆரம்பமானது.

திருவாளர்கள் கருணாநிதி, சண்முகம் உட்பட நான்கு பேரும் நீதிமன்றத்தில் வந்திருந்தனர்.

நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் சாட்சியமளித்தார்.

தன்னைச் சில நாட்களுக்கு முன்பு நான் உயிருக்குப்பயந்து ஓடியதால் அவர்களை அடையாளம் காட்டமுடியாது உள்ளது என்று ராஜேந்திரன் தனது சாட்சியத்தில் கூறினார். (இ)

பஸ் பிரயாணிகள் சங்க கோரிக்கை

(பண்டாரிப்பு)

ஆவலெட்டிப் பகுதியிலுள்ள பஸ் பிரயாணிகள் தங்களது குறைபாடுகளை தங்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்குமாறு ஆவலெட்டி பஸ் பிரயாணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தெரிவிக்கப்படும் குறைபாடுகளைப் பற்றி உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (உ)

மின்சார விஸ்தரிப்பு

(வவனியா)

வவனியா நகரசபை 5 லட்சம் ரூபா செலவில் மின்சார லைனேசத்தை விஸ்தரிப்பு செய்யும் நடவடிக்கையில் நகரசபை நிர்வாகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதனால் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் மின் ஒளி கிடைக்கும். ஏழை மாணவர் கட்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்குவதற்கென 1000 ரூபாவும், சமாதான பகுதியினர் முன்னாள் குழந்தைகளுக்கு யாவரை வழங்குவதற்கென 8000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

ஆசியகல்வி அமைச்சர்கள் மாநாடு ஜூலையில்

(கொழும்பு)

ஆசிய பிராந்தியரீதியிலான கல்வி அமைச்சர்களின் மகாநாடு அடுத்தமாதம் கொழும்பில் நடைபெற உள்ளது. ஆயோவின் கல்வி அபிவிருத்தி, கல்வி சீர்திருத்தம் போன்ற விடயங்கள் இந்த ஆராயப்படும்

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம் (யுனேஸ்கோ) ஏற்பாடு செய்யும் இந்த மகாநாட்டில் இருத்தைந்துக்கு மேற்பட்ட நாடுகள் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மகாநாடு ஜூலை மாதம் 24 ம் திகதி தொடங்கி ஆகஸ்ட் 1 ம் திகதி வரை நடைபெறும்.

இலங்கைக் குழுவுக்கு கல்வி அமைச்சர் திரு. நிசங்க விஜயத்திரு தலைமை வகிப்பார்.

இந்த மகாநாடு சம்மந்தமாக பேராதனை வளாகத்தில் நடைபெறுகிறவிழாவில் 'யுனேஸ்கோ' நிறுவன இயக்குனர் நாயகத்திற்கு "கலாநிதிப் பட்டம்" வழங்க இலங்கைப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது. (ச)

தாயகம் திரும்புவோர் நலன் கருதி.....

(உடுப்பிட்டி)

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிச் செல்லும் அகதிகளின் புனர்வாழ்வுக்கு உதவும் வகையில் தமிழகத்தின் எத்தோலிக்க மேற்றிராணத்தால் கோத்தகிரி, சிவோன் குன்றில் காணப்பட்ட பண்ணை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மேற்றிராணம் தெரிவித்துள்ளது.

நாளடைவில் இப்பண்ணைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும் நாளடைவில் அபிவிருத்தி செய்யப்பட்டுத் தாயகம் திரும்புவோருக்கு புனர்வாழ்வு அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

மதுரை மாநகராட்சி தேர்தல்

அ.இ.அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலை எம். ஜி. ஆர். வெளியிட்டார்

சென்னை, ஜூன் 20

மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியலை தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வெளியிட்டுள்ளார்.

65 தொகுதிகள் கொண்ட மாநகராட்சி மன்றத்தில் தமிழ்நாடு முஸ்லிம் லீக் (1 தொகுதி) சிறிதரன் ஜனநாயகக்கட்சி (1 தொகுதி) ஆகியவற்றுடன் அ.இ.அ.தி.மு.க; இணைந்து 49 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 5 இடங்களையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி 5 இடங்களையும் அ.இ.அ.தி.மு.க. கிட்டுக்கொடுத்துள்ளன.

சிறிதரன் ஜனநாயகக் கட்சி தமிழ்நாடு முஸ்லிம் லீக் ஆகியவை இரண்டும் அ.இ.அ.தி.மு.க சின்னத்துடனேயே போட்டியிடுகின்றன. இவ்விரண்டு வேட்பாளர் உட்பட 43 வேட்பாளர்களின் பெயர்களை திரு. எம். ஜி. ஆர். நேற்று வெளியிட்டார். இன்று அல்லது நாளை மிகுதி 6 வேட்பாளர்களின் பெயர்களையும் அவர் வெளியிடுவார்என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

கூட்டுறவு பரிசோதகர் பயிற்சி

(நெல்லியடி)

அகில இலங்கையிலுள்ள கூட்டுறவு பரிசோதகர்களாக நியமனம்பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு எனுமிடத்திலுள்ள கூட்டுறவு பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. ஆடிமாதம் 17ந் திகதி நேற்படி பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப் பயிற்சி நாளதில் கூட்டுறவு பரிசோதகர்களுக்கு வரித்தகவல், பொருளியல், கணக்கியல், வரித்தகவியல் சட்டம் உட்பட பலவேறு நெறிகள் போதிக்கப்படும். (உ)

"5 இளைஞர்கள் செல்ல அனுமதி வழங்குக"

(யாழ்ப்பாணம்)

மெயுமாவில் நடைபெற்றிருக்கும் உலக இளைஞர் ஒன்றியத்தின் 11வது இளைஞர் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 5 இளைஞர்கள் கலந்துகொள்வதான அனுமதியை அளிக்க மாநாட்டு விழா குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னர் இக்கோரிக்கையில் இருவர் மட்டுமே கூட்டணியின் சார்பில் கலந்துகொள்ளலாமென அழைப்பு அனுப்பப்பட்டது. தமது பிரச்னையை மாநாட்டாளர்க்கு எடுத்துச் செல்வதற்கு ஐவருக்கு அனுமதி அளிக்கலாமென இலங்கையில் இயக்கும் விழா குழுவினரிடம் இளைஞர் பேரவை ஆலோசனை வழங்கியுள்ளனர்.

மாநாட்டுக்கு யாரை அனுப்புவதென இளைஞர் பேரவை செயற்குழுவில் இளைஞர் பேரவை முடிவுசெய்யலாம். இது இவ்வாறிருக்க. சிறையில் இருக்கும் இளைஞர்கள் மாநாட்டுக்குழுவுடன் விடுதலைசெய்யப்படாவிடில் இந்த மாநாட்டில் திருவாளர்கள் மாவை சேனாதிராஜாவும், கவிஞர் காசி ஆனந்தனும் கலந்துகொள்வார்கள் என இளைஞர்பேரவை எட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வெ)

எண்ணை விலை

79-ல் 5 வீதம் அதிகரிக்கும்

ஜெனிவா, ஜூன் 20

எண்ணையின் விலை எதிர்வரும் ஆண்டு ஜனவரியில் 5சத வீதம் அதிகரிக்கப்படும் என்று சர்வதேச எரிபொருள் நிறுவனம் அறிவித்துள்ளது

இந்த வேளையில் இவ்வமுடம் எண்ணையில் விலையை அதிகரிப்பதில்லை என்று எண்ணை உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம் அறிவித்துள்ளது:

இந்த சமயம் இவ்வமுடத்தில் எண்ணையின் விலையை அதிகரிப்பதில்லை என்று "ஒபெக்" நிறுவனம் தீர்மானித்துள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. (இ)

வெளிநாடுகளில் 4,50,000 யு.எஸ். துருப்புகள்

வாஷிங்டன், ஜூன். 20

அமெரிக்க பாதுகாப்பு இலாகா வழங்கும் உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின் பிரகாரம், அந்நியநாடுகளில் அமெரிக்கத் துருப்புகளின் தொகை 450,000 ஆக உள்ளது. ஏறத்தாழ 30 நாடுகளில் அமெரிக்க இராணுவம் நிரந்தரமாக நிலைகொண்டுள்ளதாம். (உ)

ரஷ்யா ஆட்சேபித்தாலும்

ஜாப் சீன நட்பு ஒப்பந்தத்தில் ஜப்பான் கைச்சாத்திடும்

வெளிநாட்டமைச்சர் அறிக்கை

டோக்கியோ, ஜூன். 20

சோவியத்யூனியன் ஆட்சேபித்தாலும் ஜப்பான் சீனுவுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்தி செய்யும் நோக்குடன் சீன-ஜப்பான் நட்பு ஒப்பந்தத்தில் ஜப்பான் கைச்சாத்திடுமென்று ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் திரு. சோனோடா தெரிவித்துள்ளார்.

சீனுவுடன் ஜப்பான் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பட்சத்தில், ரஷ்ய - ஜப்பான் உறவு பாதிக்கப்படுமென்று ரஷ்யா ஜப்பானை எச்சரித்துள்ளது எனினும் ஜப்பான் அந்த ஒப்பந்தத்தில்கைச்சாத்திட்டே ஆகுமென்றும் இருநாடுகளின் நல்லுறவையே ஜப்பான் விரும்புகிறது என்றும் அவர் கூறினார்.

ஒரு நாட்டுடன் கொண்டிருக்கும் உறவு 3வது நாட்டு உறவை எதிர்பார்த்திலுப்பாதிக்காது. ரஷ்யாவை எதிர்க்கும் நோக்குடன் ஜப்பான் சீனுவுடன் உறவு கொள்ளவில்லை என்றும் திரு. சோனோடா தெரிவித்துள்ளார். (இ)

'கசூரினா' பீச்சில் "நெஞ்சுக்குத் தெரியும்"

நேர்வே நடிகையும் நடித்தார்

(திருநெல்வேலி)

இலங்கையில் முதலாவது தமிழ் "சினிமாஸ்கோப்" படமான "நெஞ்சுக்குத் தெரியும்" திரையிடப்படுவதான வெளிப்புறப்படப்பிடிப்புக்கள் கடந்த 5 இனங்களாக காரைநகர் 'கசூரினா பீச்'இல் நடைபெற்றன.

காரைநகர் சீ-நோர் நிறுவனத்தின் ஆதரவுடனே நிறுவப்பட்டிருந்த வள்ளங்களின் பின்னணியிலும் காங்கேசன்துறை, புங்கங்குளம் ரயில்நிலையங்களிலும் படப்பிடிப்புக்கள் இடம்பெற்றன.

கசூரினா பீச்'சில் காதல்காட்சிகளும், சண்டைக்காட்சிகளும் பிடிக்கப்பட்டன.

யாழ் நகரில் பல நிலையத்திற்கு முன்பாகவும் பத்திரிகையிலும் ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

நோர்வே நடிகையும் நடித்தார்

'கசூரினா பீச்'இல் நடைபெற்ற படப்பிடிப்பின்போது 'நோர்வே' நடிகையான அன்மரியாவும் இலங்கையில் நடித்தார். (இ-உ)

'முஸ்லிம்களுக்கும் படிவங்கள்'

(வவுனியா)

வேலை வாய்ப்பும் படிவங்களை நாம் அரசாங்கத்திடம் இரந்து கேட்டுப் பெறவிரும்பவில்லை எம் பிள்ளைகளுக்கும் கிடைத்ததைப்போல, எமக்கும் இவற்றை அரசு தந்துள்ளது. இவற்றை நேர்மையான முறையில் விநியோகிக்க வேண்டும்.

வவுனியாத் தொகுதியிலுள்ள 21 த. வி. கூட்டணி கிளைத் தலைவர்களிடம் இப்படிவங்கள் வழங்கும் வைபவத்தில் வவுனியா எம் பி திரு. த. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் பெருமளவு முஸ்லிம் மக்கள் எமது ஆதரிக்கிறார்கள் எனினும் குறைவாக கூட்டணிக் கிளைகளுக்கு வழங்கியதைப் போல, வவுனியா ஐஸ்லீம் ஜமியத்துல் உலமாவிடம் இன்னும் ஒரு பகுதி பலவங்களை வழங்கப் போவதாகவும் கூறினார். (ம)

கசிப்பு சிக்கியது

(வவுனியா)

கரிக்கட்டப்பட்டதாகக் கூறப்படும் 132 போத்தல் கசிப்பை வவுனியாப் பொலிஸார் கைப்பற்றினர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து முல்லைத்தீவு இன்ஸ்பெக்டர் திரு. வணிகசுந்தரம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, சந்தேகத்திற்கிடமான தரத்தில் சென்றது. கார் நிறுத்தப்படாததைத் தொடர்ந்து பொலிஸார் 5 தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின் கார் நிறுத்தப்பட்டது. சாரதியும், மற்றொருவரும் தப்பிவிட்டனர்.

காரிலிருந்த எம். யூ பெர்னாண்டோ, ஜே ஏ பெர்னாண்டோ ஆகியோரைச் சந்தேகத்தின்பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ம)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) வெற்றிநடை
தினசரி 4 காட்சிகள் 7வது வாரம்
முத்துராமன் - சந்திரகலா - ஸ்ரீவித்யா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

Regal (Jaffna)
Daily at 4-45 6-00 and 9-00 p.m. only
Ken Clark in
Special Mission Lady Chaplin
(Scope - Color—Spy Thriller)
From : 22-6-78
The Domino Principle
(Color)

சாந்தி யாழ். நகர் — போன் 7642
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
வேலி - வைஜயந்தி - பாலையா - நம்பியார்
சித்தூர் ராணி பத்தினி
(புதியபிரதி)

Coming Soon!
HUMAN VAPOUR
Cinemascope — Colour —

நரேந்திரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அரச கட்டளை

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன் - பாரதி நடித்த
நம்மவீட்டு லக்ஷ்மி
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கௌரி கல்யாணம்

விஜயா (யாழ்ப்பாணம்) போன் 7638
சிவகுமார், அம்பிகா
மதனமாளிகை

திரை அரங்கு நிறைந்த காட்சிகள். படம் பார்த்தவர்கள் மீண்டும் பார்க்கத் துடிக்கும் விந்தை. உன்னத படைப்பு. உள்ளத்தை தொடும் நடிப்பு. வண்ணத்தில் எழில் கொஞ்சி கைவண்ணத்தில் வெள்ளித்திரையில் மலர்ந்ததோர் மன்மதமலர்.
தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ்.நகர்) கமலஹாசன் - ரஜனி - ஆலம் கதா - Y. விஜயா நடித்த
மன்மத லீலை
(சஸ்பென்ஸ் கலர்)

மாபெரும் வெற்றி இதுவரை திரையிடப்பட்ட இடங்களில் 'ஹவுஸ் புல்' காட்சிகளையும், வசூல் சாதனைகளையும் முறியடித்து 50வது நாளை நோக்கி வெற்றி நடைபோடுகிறான்.
ராணி (யாழ்.நகர்) வேலி — மஞ்சுளா நடித்த
உத்தமன்
(சஸ்பென்ஸ் கலர்)
காலை 8 மணிக்கு ஒதுக்கிடமுடியாமைக்கு வருந்துகிறோம்.

மாதர் சங்கம் புனரமைப்பு

(உடுப்பிட்டி)

ஆரவெட்டி கேந்திர மாதர் முன்னேற்றச் சங்கம் கடந்த மாதம் 5ம் திகதி ஆரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகத்தினால் புனரமைக்கப் செய்து வைக்கப் படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை கிராம சேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கம் மேற்கொண்டுள்ளார். (உ)

புதிய கட்டடம்

(மட்டுவில்)

மன்முனைப் பற்றுத்தமிழ் வாரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒட்டு வெளி ஆ. மி. த. க. பாடசாலைக்குப் புதிய வகுப்பறை அமைப்பதற்காக ரூபா 30,000 த்தை ஒதுக்கிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம், மேற்படி பாடசாலைக்கு ஒரு விரி அறை பெறுதற்காகவும் ரூபா 10,000 ஒதுக்கீடு செய்துள்ளார். (உ)

மின்சார சபையுடன் வட்டு எம். பி. தொடர்பு

(யாழ்ப்பாணம்)

வைரவநகரில் உள்ள சில இடங்களுக்கும் இவ்வருட முடிவுக்குள் மின்சார வசதி செய்து தருவதாகவும் இது பற்றி நாம் இலங்கை மின்சார சபையிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் காரைநகர் வடக்கில் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட சேட் தயாரிக்கும் நிலயத்தைத் திறந்து வைத்துப் பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. நா. திருநாவுக்கரசு தெரிவித்தார். இங்கிலாறிய வட்டாரக் கல்விப்பிரிவு திரு. ச. சபாபதி தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

(உ.து. தி-உ)

இருமிநாசினி தெளித்த வாலிபர் மரணம்

(வாழ்ப்பாணம்)

உறவினரிடம் மிளகாய்த் தோட்டத்திற்கு மருந்து தெளித்துவிட்டு வந்த வாலிபர் அந்த மருந்தால் மரணமானார்.

புத்தூரைச் சேர்ந்த வைரவ சுப்பிரமணியம் என்ற வாலிபரே மரண மடைந்தவர். மேற்கண்ட விபரம் தெரிய வந்தது. வாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எல். எச். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இவ்வாலிபர் உறவினரிடம் தோட்டத்திற்கு மருந்து தெளித்துவிட்டு வந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். எதிர்பாராதவிதமாக மரணமடைந்தார் என்று விசாரணையில் கூறப்பட்டது. விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

வெஸ்லி
காலைக்காட்சி
காலை 8-30, 9-30
வேலாயுதமுதலியார்
தென்றலும் புயலும்

நாகமணி (சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ஜெமினிகணேசன்—சாவித்திரி நடித்த
'ஜக்கம்மா'

Rio (Jaffna) Phone: 7667
Daily 4 Shows
Yul Braynner in
Light at the Edge of the World

ஒரே வீட்டில் வசித்த

இருவர் ஒரே நாளில் மரணம்

(நெல்லியடி)

ஒரே வீட்டில் வசித்து வந்த மாமியாரும் மருமகனும் ஒரே நாளில் இறந்துபோன பரிதாப சம்பவமொன்று பருத்தித்துறை போலீஸ் பகுதியிலுள்ள நிக்கலஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

51 வயதுடையவரும் ஆசிரியருமான திரு. த. நெல்லையர் பிள்ளையும் அவரது மாமியார் முறையான வளிலும் பிள்ளை (73) என்றழைக்கப் படுபவளே மேற்படி இறந்த நிலையவர். காலில் மருமகனான ஆசிரியர் மாரடைப்பால் காலமானார். பிரதேசத்தில் மாமியார் காலமானார். இருவரது இறுதிக் கிரியைகள் ஒன்றாகவே நடைபெற்றன. (உ)

இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

புலவர்குலம் மகா வித்தியாலய அதிபராக கடமையாற்றிய திரு. த. சதிரவேலு வவுனியாவுக்கு தமிழ் மகா வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். (உ)

"நாம் முடிவளர்த்து

இளைஞர்கள் காலத்தை வீணாக்குகின்றனரே'

(வவுனியா)

ஆதிஜோதி நா. முத்தையாவின் 60 வயதை பூர்த்தி செய்ததையொட்டி வவுனியா மத்தாளந்த இந்து இளைஞர் மன்றத்தினரால் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது

வவுனியா எம். பி. அவருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துக் கூறினார். ஆதிஜோதி சொல்லாலும் செயலாலும், எழுத்தாலும் வாழ்வாலும், சைவமும், தமிழும் தழைத்தோங்க அயராது உழைக்கிறார் என்றார்.

ஆதிஜோதி நா. முத்தையா பேசும் போது, இளைஞர்கள் உணர்ச்சியை வளர்ப்பதற்கு பதிலாக, கூடத்தில் உணர்ச்சியில்லாத நாம், தமிழ் முடி போர்த்தவர்களை வளர்க்கிறார்கள். நிருப்புகழ். நிருவாசகம் போன்றவை கனிதனது மேனாடுணர்ச்சியை தூண்டி ஆத்மீக சக்தியை கூட்டும். 'பொப்' இசைகள் இளைஞர்களது கீழான உணர்ச்சியை கூட்டியாக தூண்டுகின்றன. இதனால் தான் 'பொப்' இசையை கேட்டவுடன் இளைஞர்கள் ஆடுகிறார்கள். இளைஞர்களை நேர்வழியில் செல்ல நாம் வழிகாட்டாவிட்டால் இந்நாட்டில் சைவமும் தமிழும் மறைந்து விடும்.

எனவே தாய்மார்கள் பிள்ளைகளை நல்ல முறையில் வாழ வழிகாட்ட வேண்டும். தாய்மார்கள் திருப்புகழ், திருவாசகம் போன்றவற்றை குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். சமய உண்மைகளை பிள்ளைகளுக்கு உணர்த்தி சமய வழியில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். நம் நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி இளைஞர்கள் யாவரும் நற்பிரஜைகளாக வாழ வேண்டுமாயின் தாய்மார்கள் பெருமுயற்சி எடுக்க வேண்டும். (உ-உ)

பதவி உயர்வு

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போக்குவரத்துச் சபையில் முன்னாள் ஊழியர் பணிபுரிவும் தொழிற்சங்கப்பிரமுகரான திரு. வி. கணபதி 8ந்தர பொறியியல் முகாமையாளர் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவரைத்தவிர மற்றும் ஏழு தொழிலாளர்களும் பதவியுயர்வுகளும் பெற்றுள்ளார்கள். இவை நடந்தநாளன்று டிப்போ பரிசோதகர் காரணமாக பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். (உ)

'வாலிபர்கள் முன்மாதிரியாக திகழவேண்டும்'

(உடுப்பிட்டி)

"கத்தோலிக்க வாலிபர்கள் இயேசுநாதரின் போதனைகளை பின்பற்றி வாழ வேண்டும். உத்தமர்களாகவும் பக்திமான்களாகவும் திகழ வேண்டும். எம்மிடையே கட்டுப்பாடு, வழிநடத்தலும் அவசியம் தேவையை வளர்க்கிறோம். கத்தோலிக்க மக்களின் முன்னேற்றத்திலும் வாலிபர்கள் பெரிதும் முன்மாதிரியாக்க வேண்டும்"

மேற்கண்டவாறு ஆரவெட்டி [illegible] ஆரவெட்டி கத்தோலிக்க வாலிபர் சங்கப் பணிபுரிந்து நெடுந்தீவுக்கு இடமாற்றமாகிச் செல்லும் அருட் திரு. பீட்டர் துரைராசாவிடம் அடிகளார் ஆரவெட்டிக் கத்தோலிக்க வாலிபர்களால் அமைக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

திரு. டி. இராஜநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்பிரியாவிடை விழாவில் திரு. எம். ஏ. இராஜேந்திரா நன்றியுரை வழங்கினார். (உ)

கத்தோலிக்க மக்களுக்கு கோரிக்கை

(உடுப்பிட்டி)

திருத் தந்தை ஆறாம் பவுல்ஸ் பரிசுத்த பாப்பரசராக முடிசூட்டப்பட்டதை நினைவூட்டும் முகமாக இம்மாதம் 25-ம் திகதியை பாப்பரசர் தினமாகக் கொண்டாடுமாறு ஈழத்துக் கத்தோலிக்கத் தமிழ் மக்கள் பீடம் கோரியுள்ளது.

பொலிஸ் இடமாற்றங்கள்

(கொழும்பு)

குருணாகல் தலைமைக் காரியாலயப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. ராஜேஸ்வரன் ஏ. எஸ். பி. யாக பதவியுயர்வு பெற்று இரத்தினபுரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலயப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டெரன்ஸ் பெரேரா வெலியகொடைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸ் அப்பீல் கோர்ட் திரு. எச். ஜி. குணவர்தன யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ)

கண்ணாட்டியில் கைதான யாழ். வளாக

மாணவன் குணசேகரம் பரீட்சை எழுத அனுமதி

[யாழ்ப்பாணம்]

கண்ணாட்டியில் வைத்துச் செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள யாழ். வளாக மாணவன் வி. குணசேகரம் இம் மாதம் யாழ். வளாகத்தில் நடைபெறும் பி. எஸ். ஸி. 2-ம் வருட பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படுவார்

யாழ். வளாக மாணவர் மன்றத் தலைவர் வ. ஜ. ச. ஜெயபாலன், வளாகத்துக்கு விஜயம் செய்த கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தினாவைச் சந்தித்து கேட்டுக் கொண்டதை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இம்மாதம் 26ம் திகதி வளாகத்தில் ஆரம்பமாகும் பரீட்சையில் தோற்றுவதற்காக குணசேகரம் யாழ். மேஜர் சாலைக்குக் கொண்டுவரப்படுவார் என்று தெரிகிறது.

வளாக நூலகக் கட்டிடத்துக்கு முதற்கட்ட வேலைகாக 49 லக்சம் ரூபா தேவை என்றும், இக்கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது என்றும் ஜெயபாலன் எடுத்துக் கூறியதும், விரைவில் அதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

வடக்குக்கோட்டையில் வெளிவாரியாக நடந்த பிரச்சினையில் கத்தியால் குத்தப்பட்டு முன்தினம் பாதிக்கப்பட்ட மாணவன் குமாரவிங்கவுக்கு உரிய நாற்காலி வழங்கி உதவுமாறு விடுத்த கோரிக்கையும் அமைச்சரால் எற்றுக்கொள்ளப்பட்டது.

வெளிவேலையிருந்து அரசியல் தலைவர்களை அழைத்து வளாகத்தில் கலந்துரையாடல்களும், சொத்தழிவுகளையும் நடாத்த அனுமதி வழங்குமாறு கேட்டதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்தார். [உ-இ]

கிளிநொச்சி தொகுதி மகளிர் பேரணை

[உருத்திரபுரம்]

கிளிநொச்சித் தொகுதியில் தமிழ் மகளிர் பேரணியில் புளொட்டும் கட்டுக் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சித் தொகுதியில் சுமார் ஐநூறு பெண்கள் தேசியப் பேரணி உறுதியினர் திரு. வி. குணரத்தினம் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி. அவர்கள் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் வேறு பல வருவோர் நீர்வாகங்களை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திருமதி தங்கராசா, உபதலைவர்: திருமதி இ. தெ. நித்தியநாயகம், செயலாளர்: செல்வி கே. பொன்னம்பேடா, உபசெயலாளர்: செல்வி மகேஸ்வரி, பொருளாளர்: திருமதி செ. சோமசேகரம் பிள்ளை. கிளிநொச்சித் தொகுதியிலுள்ள கண்டாவளை, கரைச்சி, உருத்திரபுரம், வண்டிக்கலட்டி, ஆனையிறவு, கிளிநொச்சி, கனகபுரம், நிருவாவாடி, பரந்தன், திருநகர், கனகபுரம் ஆகிய ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தும் ஒவ்வொரு வராக ஆ. பரராசசிங்கம், இ. எப்பு லட்சுமி, க. சாரதாதேவி, சு. ஞானலக்ஷ்மி, தி. மனோநாயகி, தி. மனோரஞ்சினி, பொ. பத்மாவதி, தொ. சாந்த ரூபி, இ. கமலராணி, வே. சிவலோகி, ஞா. ஞானசோதி, அ. பரமேஸ்வரி, வ. இராஜலக்ஷ்மி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்" [உ]

ஜூலை முதல் அதிகரிக்கும்

பஸ் கட்டணங்கள்

[தொழுவு]

இ. போ. ச. பஸ் கட்டணங்கள் ஜூலை 1-ந் தேதி முதல் சகல பாதைகளுக்கும் 10 சதத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. 30 சதம்முதல் 90 சதம் வரையிலான டிக்கட்டுகள் 10 சதத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு ரூபாமுதல் ஒரு ரூபா 90 சதம்வரையிலான டிக்கட்டுகள் 20 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது'

30 சத டிக்கட் 40 சதமாகவும், 40 சத டிக்கட் 50சதமாகவும், 50 சத டிக்கட் 60 சதமாகவும், 60 சத டிக்கட் 70 சதமாகவும், 70 சத டிக்கட் 80 சதமாகவும், 80 சதடிக்கட் 90 சத டிக்கட் 1 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

2 ரூபாவுக்கு மேற்பட்ட டிக்கட்டுகளின் அதிகரிப்பு விபரம் வருமாறு:-

ரூபா 2.00-2.90 (30சதம்)
ரூபா 3.00-3.90 (40 சதம்)
ரூபா 4.00-4.00 (50 சதம்)
ரூபா 5.00-5.90 (60 சதம்)
ரூபா 6.00-6.90 (70 சதம்)
ரூபா 7.00-7.90 (80 சதம்)
ரூபா 8.00-8.90 (90 சதம்)
ரூபா 9.00-9.90 (ரூ. 1.00)
ரூபா 10.00-10.90 (ரூ 1-10)
ரூபா 11.00-11-90 (ரூ.1.20)
ரூபா 12.00-12.90 (ரூ 1.30)
ரூபா 13.00-13-90 (ரூ 1.40)
ரூபா 14.00-14-90 (ரூ 1.50)
ரூபா 15.00-15.90 (ரூ 1.60)
ரூபா 16.00-16.90 (ரூ 1.70)
ரூபா 17.00-17.90 (ரூ.1.80)
ரூபா 18.00-18.90 (ரூ.1.90)
ரூபா 19.00-19.90 (ரூ 2.00)
ரூபா 20.00-20.90 (ரூ 2.10)
ரூபா 21.00-21-90 (ரூ 2.20)
[ம]

வேலைதேடி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லாம் ஆனால் இக்கல்லூரி தொழில் இலாகாவுடன் பதிவுசெய்துகொள்ளவில்லை என்றும் தெரியவந்துள்ளது. இதில் சேர்ந்த வாலிபர்கள் பலர் பொலிசாரிடம் புகார் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இந்த வகை பணம்பறிக்கும் இவை ஏஜன்சிகள் ஆரம்பித்திருப்போர் மீது பி.ஐ.டி. பிரிவினர் கண்காணிப்புச்செய்து வருகின்றனர். எனினும் இவைஞர்கள் இவ்விதமாக ஏமாறுவதன் நேரடியாக, தொழில் இலாகாமூலம் அல்லது பணம் அறவிடாத ஏஜன்சிகள்மூலம்விண்ணப்பிக்கவேண்டும் என்றும் பொலிஸ்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

ஒருவார—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முழுவதும் அரசு அலுவலகங்கள் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவேண்டும், விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் கொடுவிலை இயக்கத்தை நடத்தவேண்டும் தீர்மானித்துள்ளது.

முல்லைத்தீவு கொலைவழக்கு:

எதிரிகள் விடுதலை

(வவுனியா)

முல்லைத்தீவு கொலைவழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரையில் நான்கு பேருடைய நல்லாக்கு எம்பலவரைக் கொலைசெய்த தாக வைரவர் வைரவநாதன், அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. நாகராஜாவும் சட்டத்தரணி எஸ். ஜெகராஜாவும் ஆகியோர் ஆஜராகி அரசு தரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜராகி.

தமிழின விடுதலைக்காக:

சாவகச்சேரியில் பெண்கள் மௌனவிரதம்

(சோடிகரன்)

தமிழினத்தின் விடுதலைக்காக சாவகச்சேரி மக்கள் நேற்று 2 மணி நேர மௌன விரதத்தை அனுஷ்டித்தனர். தமிழ் இனத்தை கடவுள் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தை செய்வாகிக் நாரத மந்திரங்களை வைத்தே இந்த மௌன விரதம் அனுஷ்டிப்பதாகவும் செய்துவைக்கப்பட்டது என்று அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை சாவகச்சேரி தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் ஏற்றுதாப் பணம் செய்துவைக்கப்பட்ட இந்த மௌனவிரதத்தை ஒவ்வொரு பெண்ணும் நினைத்திருந்து அனுஷ்டிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருமதி மீனாம்பாள் ஜயரத்துரை தலைமையில் நடந்த இவ்விரதத்தை திருமதி அருணாசலம் ராஜபூபதி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். திருமதி ரகுபதி நவரத்தினம் உட்பட 100 பெண்களும் 20 ஆண்களும் இவ்விரதத்தில் கலந்துகொண்டனர்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திருமதி மீனாம்பாள் ஜயரத்துரை ஆகியோர் உரையாற்றிய பின்னர் காலை 10 மணி முதல் 12 மணி வரை விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. [இ]

பயிற்சி பெற்றும் இந்த ஆசிரியருக்கு வேலை இல்லை

[அரியாலை]

1977ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வடமாகாணத்தில் பயிற்சிக்கலாசாலைகளில் ஆசிரியர்களாக பயிற்சிபெற்று வெளியேறிய மொத்தம் 600க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இதுவரை ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை

தோவிடப் பாடசாலைகளில் வெற்றிடம் ஏற்பட்டு இவர்கள் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட பொழுது சம்பளத்தோடுகூடிய விடுமுறை கொடுக்கவில்லை. தமது சொந்தப் பணத்தில் தான் படித்தார்கள். பயிற்சி பெற்று வெளியேறிய இவ்வாசிரியர்கள் கல்வி அமைச்சரை நேரில் கண்டு பேசியபொழுது இவர்களுக்கு அரசாங்க பாடசாலைகளில் ஆசிரிய நியமனங்கள் வழங்குவதாகக் கல்வி அமைச்சர் 3-5-78ல் உத்தியோகபூர்வமாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தும் இதுவரை இவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவில்லையாம்.

இவ்வாசிரியர்களில் 66 பேர் குரும்பசிட்டியிலும் 3 ஆசிரியர்கள் கடற்கரையிலும் விசேட பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

40 வருட ஆசிரியசேவைக்கு பாராட்டு

[அரியாலை]

"தனது கடமையைக் கண்ணுக்கெதிரேயே கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியப்பணிபுரிந்த திருமதி யோகராசா இந்தநாட்டில் மிகவும் சிறந்த பிரஜையை ஆக்கியுள்ளார். பரி. யோவான் கல்லூரியில் கணக்கர் 35 வருடங்களுக்கு மேலாக ஆரம்பப்பாடசாலையில் ஆசிரியராகவும்பணிபுரிந்து கல்வி போதித்தஇவரதுசேவையை இக்கல்லூரி என்றும் மறக்கமுடியாது. பொறுமையுணர்வோடும், கடமையுணர்வோடும் எடுத்த கருமத்தைச் சிறப்புடன் செய்யும் இவர் போன்ற ஆசிரியைகளால் தான் நாட்டிற்கு நல்ல பிரஜைகளை ஆக்கியுதவமுடியும்." இவ்வாறு யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி பிதாவே மேலோரியக் கூடத்தில் நடைபெற்ற ஆசிரியை திருமதி யோகராசாவின் பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமை வகித்த கல்லூரி அதிபர் திரு. இ. ச. ஆனந்தராசா யேகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியையின் சேவைநலன் பாராட்டி ஆசிரியர்கள் சார்பில் திரு எஸ் பெலிக்ஸ் மனிறமும், மாணவர்கள் சார்பில் மாணவ தலைவன் செல்வன் ஜெயரத்னமும் பேசினர்

தனக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்துத் திருமதி யோகராசா யேகையில், கிறிஸ்தவ மிஷனரிமாரிடம் தான் கற்ற நல்ல கல்வியின் மூலமே இவ்வளவு காலமும் ஆசிரிய சேவையில் நிறைவாகப் பணிபுரிய முடிந்ததென்றும், ஆசிரியர்களிடம் பணிவு, அடக்கம், சிறந்த பண்பாடு, ஒழுக்கம் என்பன இருக்க வேண்டுமென்றும் இதன்மூலமே நாட்டுக்கும் நல்லவை ஆண்டவரும் பிள்ளைகளுக்கும் சிறந்த சேவை செய்ய முடியுமென்றும் நாடிடித்து நல்லபிரசைகளை ஆக்கியுதவ முடியுமென்றும் பரி யோவான் கல்லூரியில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களிடமும் கல்விகற்கும் மாணவர்களிடமும் நிறையும் பற்றும் பாசமும், அன்புமதான் இக்கல்லூரி சிறந்த கல்லூரியாக விளங்குவதற்குக் காரணமாக இருக்கிறது. இக்கல்லூரி இந்த நாட்டிற்கு சிறந்த கல்விமான்களை ஆளித்துவருவதுபோல, தொடர்ந்தும் சிறந்த சேவையுள்ள ஆசிரியர்களும்-மாணவர்களும் ஒன்றுபட்டுழைக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்,

கல்லூரியில் ஆசிரியர்-மாணவர்கள் சார்பில் "யோதகிளி" வழங்கி மரியாதை செய்து திருமதி யோகராசா கௌரவிக்கப்பட்டார்.

ஆஸி—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஐக்கியநாடுகள் சங்கத்தில் யாழ்.கிளை, அடுத்த மாதம் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயம், அதற்கடுத்த மாதங்களில் சோவியத், ஜேர்மன் நாட்டுத் தூதுவர்களையும் யாழ்ப்பாணம் வரவழைக்கும் பாடுகள் செய்யப்பட்டுள்ளது;

உங்களுக்கு வேண்டிய
★ கைக்கடிகாரங்கள்
★ சுவர் மணிக்கூடுகள்
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
கடிகாரங்களில் மலிவாகக் கிடைக்குமிடம்
நேரடி இறக்குமதியாளர்
நா. சாம்பசிவம் அன் கோ.,
9599 யாழ்ப்பாணம். போன்: 454.

மரண அறிவித்தல்

ஐ. நாகமுத்து

ரயில் போக்குவரத்து உதவியாளர் ஐ. நாகமுத்து காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 21-6-78 புதன்கிழமை மாலை 8 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் இல. 40, இராமநாதன் வீதி இல்லத்திலிருந்து கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: புதல்வர் நா. தம்பித்துரை, ஆசிரியர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

9633

இப்பத்திரிகை 'எனாடு' லிமிடெட் அதாவதுத்தாரால் யாழ்ப்பாணம் கோட்டை வீதியில் கோட் விதி, 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box: 49, Jaffna. Telegram: Eelanadu Telephone: 389. Registered Newspapersr Sri lanka.